# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜாமக்காரன்

JAMAKKARAN


**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1 தெச. 5:21

ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15


**VOLUME - 7 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 3**

**MARCH 2023 TAMIL & MALAYALAM**

**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**



Mob.: No. **9894261333**

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com


கர்த்தருக்குள் அன்பான வாசகர்களே !

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன்.



இந்த மாதமும் ஜாமக்காரன் வழியாக உங்களை சந்திப்பதில் சந்தோஷம். வாசகர்கள் ஒவ்வொரு நாளும் வேத வசனத்தை வாசித்து அதை ஆராய்ந்து பார்த்து அதன் சரியான அர்த்தத்தை அறிந்துக்கொள்வதோடு சரித்திர ஆதாரங்களையும் அன்றைய கலாச்சார சூழ்நிலையின் விவரமும் அறிந்து வாசிக்கும் வசனத்தின் சரியான விளக்கங்களையும் அல்லது விவரங்களை அறிய வேண்டும் என்பது மிக முக்கியம்

**மேலோட்டமாக** வேதத்தை வாசிப்பதால் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சியில்லாமல் தவறான உபதேசத்தை பின்பற்றியதால் கிறிஸ்துவின் வருகையில் கைவிடப்பட்டவர்களாவீர்கள். பரம்பரை கிறிஸ்தவ குடும்பத் திருந்தாலும் **மனம்திரும்பி இரட்சிப்பின்** அனுபவத்தை அடைந்திருந்தாலும் வசன அடிப்படையில் நம் ஜீவியத்திலும் வரும் ஒவ்வொரு விஷயத்திலும் **சாட்சியுடன்** வாழ்வதுதான் மிக முக்கியம். **சாட்சியில்லாத வாழ்க்கை** கிறிஸ்தவ வாழ்க்கை அல்ல.


# MARCH - 2023

வேதத்தை **மேலோட்டமாக** வாசிக்காமல் மேலே குறிப்பிட்டபடி ஆராய்ந்து பார்த்து வசனத்தை சரியான அர்த்தத்தை விளங்கிக்கொள்ளவேண்டும். உதா. அப். 17:10,11 **பெரோயா** பட்டிணத்தில் உள்ள சபை மக்கள்... மனோ வாஞ்ஜையாய் **வசனத்தை** ஏற்றுக்கொண்டு காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் **வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால்** தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாய் இருந்தார்கள் என்று எழுதப்பட்டுள்ளது. ஆனால் இந்த வசனத்தை **ஆங்கில** வேதத்தில் அல்லது **மூல பாஷையில்** வாசித்தால் **பவுல்** கூறியதை **ஆராய்ந்துப் பார்த்ததால்** என்று எழுதியிருக்கிறது. ஆனால் தமிழில் **வேத வாக்கியங்களை** ஆராய்ந்து பார்த்தால் என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இதில் உள்ள வித்தியாசத்தை கவனித்தீர்களா ! **பவுல்** கூறியதையே இவர்கள் நம்பாமல் அதை **வேத வசனங்களோடு** ஒப்பிட்டுபார்த்து பவுல் கூறியதை ஏற்றுக்கொண்டார்கள். **தேவ தூதனே** கூறினாலும் வேத **வசனத்தில் இருக்கிறதா** என்று ஒப்பிட்டு பார்த்து அந்த கருத்தை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று **சொல்லிக்கொடுத்ததே பவுல் தான்.** இப்போது பவுல் கூறியதையும் வசனத்தோடு ஒப்பிட்டு பார்க்கிறார்கள் என்றால் **எவ்வளவு ஜாக்கிறதையாக இருக்கிறார்கள்.** நீங்களும் மற்றவர்கள் உபதேசங்களை. மற்ற ஊழியர்கள். பாஸ்டர்கள் அல்லது வரம் பெற்றவர்கள் கூறினாலும் வசனத்தை ஒப்பிட்டு பாருங்கள். ஆகவேதான் **வாசகர்களாகிய** உங்களையும் ஜாக்கிறதையாக இருக்க ஆலோசனை கூறுகிறேன். **ஜாமக்காரனில் Dr. புஷ்பராஜ்** எழுதினாலும் வசனத்தோடு அந்த உபதேசத்தை ஒப்பிட்டு பாருங்கள் என்று கூறுகிறேன்.

சமீபத்தில் தம்பி **G.P. ராபின்சன்** அவர்களின் **மனைவியின்** அடக்க ஆராதனை நிகழ்ச்சிகளை YouTubeல் போட்டு காண்பித்தார்கள். அந்த மரண வீட்டில் பேசியவர்கள் அனைவரும் அடக்க ஆராதனையில் பேசவேண்டிய முக்கியமான விஷயங்களை பேசாமல் தங்கள் **காரியங்களையும்** மரித்த சகோதரியை **புகழ்த்தியும்,** சில சம்பந்தமில்லாத விஷயங்களை பேசி நேரத்தை மிகவும் வீணாக்கினார்கள். **இயேசு அழைக்கிறார் பால் தினகரன்,** அரசியல்வாதிகள் தங்கள் மேல் மக்கள் **கவனத்தை** திருப்ப கூட்டத்துக்கு **மிக தாமதமாக வந்து** கூட்டத்தில் சலசலப்பை உண்டாக்கினார்கள். **பால் தினகரன்** பேசும்போது **தன் தங்கை கார் விபத்தில்** மரித்ததைப்பற்றி **உருக்கமாக பேசி** மக்கள் **அனுதாபத்தை** சம்பாதிக்க வழக்கமாக அவர் கூட்டங்களில் பேசுவதைப்போல் பேசிவிட்டு போனார். மக்களும் அதை கேட்டு கேட்டு பழகி போனதால்

எந்த அனுதாபத்தையும் காட்டவில்லை. கடைசியாகத்தான் தம்பி ராபின்சன் மனைவியைப்பற்றி மிகமிக சுருக்கமாக பேசி முடித்தார்.

அந்த **அடக்க ஆராதனையில்** பேசியவர்களிலேயே **மிக அற்புதமாக பேசியவர் BYM R. ஸ்டான்லி அவர்கள் மாத்திரமே. மேலும்** பேச வேண்டிய மிக முக்கிய எச்சரிக்கையை கூற அங்கு வந்த **அனைத்து சபை மக்களும்** அறிய வேண்டிய மிக முக்கியமான விஷயத்தை ஒரு ஆசிரியரைப்போல அவைகளை **விளக்கியும்,** எச்சரித்தும் தவறான **ஊழியர்களை** சுட்டிக்காட்டியும் சகோ. R. ஸ்டான்லி அவர்கள் மிக அருமையாக பேசி முடித்தார். பேசி முடித்தவுடன் அங்கு இருக்க பிடிக்காமல் உடனே புறப்பட எழுந்தார், ஆனால் தம்பி ராபின்சன் கட்டாயப்படுத்தி உட்கார வைத்தார். அவர் **உடல் நிலை புரியாமல்** அப்படி அமர செய்து விட்டார். சில நாட்களுக்கு முன்தான் அவர் CMC ஆஸ்பத்திரியிலிருந்து வீடு வந்து சேர்ந்தார். இந்த நிலையில் ஸ்டான்லி அவர்கள் அங்கு வந்திருக்க கூடாது. ஆனால் ஆவியானவர் அவரை அழைத்து வந்து ராபின்சன் முதல் சகல ஊழியருக்கும் சரியான எச்சரிப்பை அறிவித்து சென்றார்.

கடைசியாக **நாலுமாவடி** சகோ. **மோகன்** C. **லாசரஸ்** பேசினார். **ஜெப வேளையில்** அந்த கூட்டத்தில் **இந்து** மதத்தினரும், **முகமதிய மதத்தினரும்** அடக்க **ஆராதனையில்** கலந்துக் கொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன். அப்படிப்பட்ட கூட்டத்தில் எல்லாரும் எழுந்து நின்று **அன்னிய பாஷையில்** ஜெபிப்போம் என்றார். **ஏன் தமிழில்** ஜெபித்தால் **கடவுளுக்கு புரியாதா?** வந்த **புறமதத்தினர்** என்ன நினைப்பார்கள். பவுல் கூறியதைபோல் **அன்னிய பாஷையில்** பேசியவர்களை அவிசுவாசிகள் **பையித்தியக்காரர்கள்** என்று நினைக்க மாட்டார்களா ? அவர் TV சேனலை புறமதஸ்தர்களும் பார்க்கிறார்களே என்ற சாதாரண **ஞானம்** கூட இல்லாமல் **அன்னிய பாஷை** என்ற பெயரில் **எண்ணமாய் உளருகிறார்.** தயவு செய்து நான் கூறுயதை உறுதிசெய்ய மறுபடியும் மறுபடியும் அந்த **ஜெப நிகழ்ச்சியை** YouTubeல் **போட்டுபாருங்கள்,** அவர் ஜெபத்தில் சொன்ன **உளரல் வார்த்தையையே** திரும்ப திரும்ப கூறி **உளறுவதை** நீங்கள் அறியலாம். அவர், தான் உயிர்மீட்சி கூட்டத்தில் பேசுவதாக நினைத்து விட்டார் என்று நினைக்கிறேன். மேலும் இவர் TVயில் அறிவித்ததைப்போல முகம் குப்புற விழுந்து ஜெபித்தால் கர்த்தர் நிச்சயம் கேட்பார் என்று சத்தியம் TVயில் செய்துக் காட்டியதை போல அடக்க ஆராதனை ஜெபத்தில் மக்களை கீழே முகம் குப்புற விழ சொல்லவில்லை. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

ஆகவே **வாசகர்கள்** இப்படிப்பட்ட **தவறான உபதேசங்களுக்கும்** அதை கூறும் இப்படிப்பட்ட ஊழியர்களுக்கும் விலகியிருங்கள், சிலர் **பிரசங்கம்** செய்யும்பேது நடுநடுவே **அன்னிய பாஷை,** பேசுவார்கள். இது எதற்கு?. சிலர் **பாடும்போது** இரண்டு வார்த்தை **அன்னிய பாஷை** பேசுவார்கள் இது எதற்கு? **இவர்களை தயவுசெய்து நம்பாதீர்கள்.** இப்படி நடு நடுவே அன்னிய பாஷை பேசுபவர்களை நோக்கி நீங்கள் பிரசங்கிக்கும்போதும். ஜெபிக்கும்போதும். **நடுவில் ஒரு பாஷையில்** இரண்டு **வார்த்தை உளருகிறீர்களே!** அதன் **அர்த்தம் என்ன?** என்று கேட்டுப்பாருங்கள். **அவர்களுக்கே** தெரியாது, அதை ருசித்தவர்களுக்குத்தான் **அதன் அர்த்தம் தெரியும்.** மற்றவர்களுக்கு புரியாது என்று கூறி சமாளிப்பார்கள். மேலும் இவர்கள் நான் **நடுவே தேவனோடு** இரகசியமாக பேசுவேன் என்றும் கூறி உங்கள் வாயை அடைப்பார்கள். ஜாக்கிறதை ! **Dr.புஷ்பராஜ்** ஆகிய நான் **பரிசுத்தாவியானவருக்கு எதிரானவன்** அல்ல, நானும் பரிசுத்தாவியானவரால் **நிறைக்கப்பட்டு** பிதா குமாரன் பரிசுத்தாவியானவரையே **எனக்குள் பெற்றிருக்கிறேன்.** அப்படி கூறுவதைவிட **அவரே என்னில் வாசம் செய்ய** அல்லது குடியிருக்க **அவராகவே என் இருதயத்தின் உள்ளே நுழைந்தார். என்று கூறுவதுதான் சரியாக இருக்கும்,** அடைப்புக்குள் குறிப்பிட்ட வசனங்களை வாசித்துப் பாருங்கள் நான், எழுதுவது உண்மை என்று உங்களுக்கு விளங்கும். (யோ. 16:24,25, எபே. 1:13)

**(ஜாமக்காரன் :** தம்பி G. ராபின்சன் அவர் மனைவி இறந்து போனதற்கு அவருக்கும் அவர் குடும்பத்தினருக்கும் எங்கள் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறோம். நான் எழுதுவது மாய்மாலமல்ல.)

டாக்டர் **புஷ்பராஜ்**


## ONLINE BANKING (NEFT)

**Name : M G E PUSHPARAJ**

**STATE BANK OF INDIA**

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 **A/C No: 10764116842**

SWIFT CODE - SBININBB300 **A/C No: 10764116842**

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622. **A/C No: 1219101013622.**

SWIFT CODE - CNRB0001219 -1219101013622. **A/C No: 1219101013622.**

# ஜாமக்காரன்

சகோ. **R. ஸ்டேன்லி** அவர்களையும் அவர் மனைவி Dr. லில்லியன் ஸ்டான்லி அவர்களையும் CMC ஆஸ்பத்திரியில் சந்தித்து பழகியிருக்கிறேன். **ஸ்டேன்லி அவர்கள் சிவில் இன்ஜினியராக** பணியாற்றும் காலத்திருந்தே நான் அறிவேன். நான் CMCயில் உள்ள **செவிலியர்களுக்கு** ஆவிக்குரிய செய்தியை அளிப்பதற்காக 1965ம் வருட முதல் CMC ஆஸ்பத்திரிக்கு மாதம் ஒரு முறை **நர்சிங் சூப்ரண்டன்டன்ட்** Sis Alice, Sis Victoria அவர்களால் அழைக்கப்பட்டு ஒரு மணி நேர பிரசங்கத்துக்காக ஒவ்வொரு மாதமும் CMCக்கு **வெல்லூர்** போய் வந்தேன். 1970ம் வருடம் முதல் மாதம் வழக்கம்போல் ஒரு நாள் செய்தி அளிக்க CMC ஆஸ்பத்திரிக்கு அழைக்கப்பட்டிருந்தேன். அப்போதுதான் சகோ.ஸ்டான்லி தம்பதிகளை மிக நெருக்கமாக பழக சந்தர்ப்பம் கிடைத்தது. அடிக்கடி சந்திக்க நேர்ந்தது. இவர்கள் முழு நேர ஊழியத்திற்கு வந்தபின் இவர்களின் **வேத அறிவும், வேத வசனங்களை பகுத்தறியும் ஞானத்தையும் அறிந்தேன்.** R.ஸ்டான்லி அவர்கள் **பைபிள் டீச்சராக** உருவெடுத்தபின் இவர்களுக்குள் உள்ள தாலந்துகளை மிக நன்றாக அறிய முடிந்தது. **சில உபதேசங்களில்** நாங்கள் **வேறுபட்டிருந்தாலும்** இவரின் எழுத்துக்களில் நான் மிகவும் கவரப்பட்டேன். இவர்கள் இருவரின் செய்திகளையும் என் **ஜாமக்காரனில்** அவ்வப்போது எடுத்து உபயோகிப்பேன். குறிப்பாக மலையாளத்தில் வெளியிடும் என் **ஜாமக்காரனில்** இவர்கள் செய்தியை நான் வெளியிட்டால் மறுவாரமே இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் வாழும் **மலையாளிகள்** மிகவும் செய்திகளை குறிப்பிட்டு புகழந்து எழுதி R. ஸ்டான்லி. Dr. லில்லியன் ஸ்டான்லி இவர்களின் செய்திகளை தொடர்ந்து வெளியிடும்படி கேட்டுக்கொண்டார்கள். இவர் எழுதும் பத்திரிகை செய்திகள், **ஆவிக்குறிய புஸ்தகங்களை** வாசிப்பவர்கள் வேறு. அதோடு இவர்களுடைய பிளஸ்சிங் Blessing மாதாந்திர பத்திரிகையின் **வாசகர்கள்** வேறு, **அப்படியே ஜாமக்காரன்** பத்திரிகையின் **வாசகர்கள் வேறு.**

ஆகவே இவர்களின் ஆவிக்குரிய கருத்துக்களை ஜாமக்காரன் வாசகர்களும் பயனடையவேண்டி அடிக்கடி இவர்கள் செய்திகளை வெளியிடுகிறேன். அதன் மூலம் கொஞ்சம் ஓய்வு கிடைக்கிறது. இப்போது

கீழே நீங்கள் வாசிக்க போகும் செய்திகளை சகோ. **R.ஸ்டான்லி** அவர்கள் எழுதி வெளியிட்ட **பைபிள் நீரோடைகள்** என்ற புஸ்தகத்திலிருந்து நான் வாசித்த சில பகுதிகளை மட்டும் எடுத்து வெளியிட்டிருக்கிறேன். இனியும் அவ்வப்போது ஜாமக்காரனில் இவர்களின் செய்திகளை வெளியிடுவேன்.

சகோ. R. ஸ்டான்லி அவர்களும் என் உடன் ஊழியர் **Dr. முரளிதர்,** M.D., அவர்களும் நானும் மரணத்தின் **வாசல்படிவரை** சென்று திரும்பியுள்ளவர்கள் ஆகும். **வாழ்க்கையின் முடிவை** வியாதிப் படுக்கையில் படுத்திருந்த ஸ்டான்லி அவர்கள் மிக நன்றாக **பலமுறை** உணர்ந்திருந்தார். ஒரு நாள் **இருதய அறுவைக்காக** ஆப்பரேஷன் தியேட்டருக்கு சென்று சுமார் **7 மணி நேரம்** இருதயத்தை **வெளியில் எடுத்து ரிப்பேர்** செய்து **திரும்ப உள்ளேயே வைத்து** சரிசெய்தபின் சுகமான நிலையில் **வார்டுக்கு** கொண்டுவந்தார்கள். ஆனால் இரண்டாம் முறை மறுபடியும் சில பிரச்சனைக்காக **அறுவை சிகிச்சை** செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அந்த நிலையில் சகோ. R. ஸ்டான்லி அவர்கள் அனுபவித்த **மரண வேதனைகளை** உடன் இருந்த என் நண்பர்களான **டாக்டர்கள்** கூறியபோதுதான் விவரம் அறிந்து **நாங்கள் சிலராய்** அவரவர் இருக்கும் இடத்திலேயே அவர் உயிர்பெற்று திரும்புவரை **இரவும் பகலும்** இணைந்து ஜெபித்தோம். என் கொரோனா வியாதியில் **மரண வேளையில்** நான் அனுபவித்ததை ஜாமக்காரனில் வாசித்திருப்பீர்கள். கர்த்தர் எங்களுக்கு கொடுத்த **உயிர் பிச்சைக்கு** கர்த்தருக்கு **ஒரு பெரும் நோக்கம்** உண்டு என்பதை நாங்கள் உணர்ந்தோம்.

என் உடன் ஊழியரும் இருதய வியாதி நிபுணருமான டாக்டர் முரளிதர்,M.D. அவர்களும் எங்களைப்போல மரண படுக்கையில் கிடந்து மறுபடியும் உயிர் பிழைத்து இப்போது மறுபடியும் ஊழியம் செய்ய துடங்கிவிட்டார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

சகோ. ஸ்டான்லி அவர்கள் தன் **அனுபவத்தை** அவர் புஸ்தகத்தில் எழுதியுள்ளார். நிச்சயம் உங்களுக்கு அவர் மரண படுக்கை அனுபவம் பிரயோஜனமாக இருக்கும். அதனால்தான் இம்மாத ஜாமக்காரனில் **இருதய அறுவை சிகிச்சை** என்ற தலைப்பில் அவர் எழுதியதை **முதல் செய்தியாக** இங்கு வெளியிடுகிறேன். BYM சகோ. R. ஸ்டான்லி எழுதும் புத்தகங்கள் தேவைப்படுவோர் கீழே நான் எழுதும் விலாசத்தில் தொடர்பு கொள்ளலாம்.

**Bro. R. Stanly,** 13, Church Colony , Vellore - 632 006, Tamilnadu
Mobile : 0091-984370707600, 9843011943



Bro. R. ஸ்டான்லி

# இருதய அறுவை சிகிச்சை

# Open Heart Surgery

R. ஸ்டான்லி ஆகிய நான் எனது 50ம் வயதில் 1996ம் ஆண்டு, எனக்கு ஏற்பட்ட வியாதியிலிருந்து தேவன் என்னை விடுவித்து **எனது வாழ்நாட்களைக் கூட்டிக்கொடுத் துள்ளார்.** அதன்பின் திருப்பணியில் தீவிர ஈடுபாடு கொண்டிருந்த காலத்தில் **எனக்கு இருதய கோளாறு** இருக்கிறதெனத் திடீரென்று கண்டுபிடிக்கப்பட்டது. வேலூர் கிறிஸ்தவ மருத்துவமனையில் (CMC) 2020 ஏப்ரல் 23 அன்று எனக்கு இருதய அறுவை சிகிச்சை நடைபெற்றது. எனது **தமனியில்** மூன்று அபாயகரமான **அடைப்புகள்** இருந்தது கண்டறியப்பட்டது. எனது மருத்துவர் **Dr. ஜேக்கப் ஜோஸ்** அவர்களது பரிசோதனையை அடுத்து இருதய அறுவை சிகிச்சை நிபுனர் Dr. ராய் குருவில்லா அவர்களால் **7 மணி நேர** அறுவை சிகிச்சை நல்ல முறையில் நடந்து முடிந்தது. அறுவை சிகிச்சைக்கு அடுத்த நாட்களில் பல சிக்கல்களும், பிரச்சனைகள் எழுந்தன. ஆனால் ஆண்டவர் பத்திரமாய் என்னை அந்த மரண ஆபத்திலிருந்து மறுபடியும் என்னை வெளிக்கொண்டுவந்தார். 2021 ஏப்ரல் 23 அன்று எனது இருதய அறுவை சிகிச்சையின் **வெள்ளி விழாவைக்** கொண்டாடினேன். தேவனது இரக்கங்களை கண்ணீருடன் நினைவு கூர்ந்து **இக்கட்டுரையை** எழுதுகிறேன். 75ம் வயதிற்குள் (2021) வந்துள்ள நான் தேவ கிருபையால் என் ஆயுள் **நீட்டித் தரப்பட்ட** நாட்களிலே **வாழ்ந்துக்கொண்டிருக்கிறேன்.** மன்னன் **எசேக்கியாவுடன்** சேர்ந்து நான் அறிக்கையிடுவது: இதோ, **சமாதானத்துக்குப் பதிலாக மகா கசப்பு வந்திருக்கிறது.** தேவரீரோ **என் ஆத்துமாவை நேசித்து** அழிவின்


குழிக்கு விலக்கினீர். **என் பாவங்களையெல்லாம் உமது முதுகுக்குப் பின்னால் எறிந்துவிட்டீர்.** நான் என்ன சொல்லுவேன். அவர் எனக்கு வாக்கு அருளினார். அப்படியே செய்தார் **என் ஆயுளின்** ஆண்டுகளிலெல்லாம் என் ஆத்துமாவின் கசப்பை நினைத்து (மிருதுவாய், கவனமாய்) நான் நடந்துக்கொள்வேன் (ஏசா. 38:17,15)

## குடும்பத்தினரும் – நண்பர்களும்

என் **மரண இருளின்** பள்ளத்தாக்கின் வழியே நான் நடந்துப் போகையில் **தோளோடு தோள் கொடுத்து** என்னுடன் நின்ற **எனது குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும்** நான் போதுமான அளவு நன்றி சொல்ல முடியாது. (சங். 23:4) அவர்கள்தான் என்னைத் **தேற்றிய தேவனது கோலும் தடியுமாயிருந்தனர்.** இக்கால கட்டத்தில்தான் என்றுமே இல்லாத அளவு நீதிமொழிகள் 17:17ன் பொருளை தெளிவாய் புரிந்துக்கொண்டேன். **சிநேகிதன்** எல்லா வேளைகளிலும் **சிநேகிப்பான், இன்னல் வேளையில் உதவவே சகோதரன் பிறந்திருக்கிறான். நான் ஒத்துப்போக முடியாத உபதேசத்தைக்** கொண்டுள்ள **பிரசங்கிமார்** பலருங்கூட எனக்காய் கண்ணீருடன் ஜெபித்தார்கள். ஆம், மக்களின் முக்கியதுவத்தை நாம் கடுமையான சூழல்களில்தான் புரிந்துக்கொள்கிறோம். **13 முதல் 15 ஆண்டுகள்** உங்களுக்கு ஏதும் **பிரச்சனையில்லாது இருக்கலாம்** என்ற உத்திரவாதத்தை மட்டுமே மருத்துமனையிலிருந்து என்னை அனுப்பிவைக்கும் போது மருத்துவர்கள் சொல்லி அனுப்பினார்கள். ஆனால் **தேவனது கரத்தின் கீழ்** இன்று கூடுதல் **10 ஆண்டுகள் உயிர் வாழ்கிறேன்** ! இந்த ஆயுள் உங்களுக்கு கொடுக்கப்பட்ட போனஸ்! என இருதய டாக்டர்கள் கூறினர். இருதய மருத்துவருக்கும், **அறுவை சிகிச்சை நிபுணருக்கும்** ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் 23 தோறும் நன்றி கூறுகிறேன்.

சில சமயங்களில் நான் கூப்பிடும் முன்னரே அவர்களே என்னுடன் பேசிவிடுகின்றனர்! 1996 முதல் இந்த டாக்டர்களிருவரும் **எங்கள் குடும்ப நண்பர்களாகிவிட்டனர். இதில் Dr. ஜோஸ்** அவர்கள் திருச்சி St. Joseph's கல்லூரியில் மாணவராயிருக்கையில் 1970ம் ஆண்டு **நான் அவரை கிறிஸ்துவுக்குள் நடத்தியதை** எனக்கு நினைவுப்படுத்தினர். Bible Treasurers என்ற எனது 832 பக்க நூலை Dr. ராய் அவர்கள் 2013ம் ஆண்டு CMC மருத்துவமனை வளாகத்திலேயே வெளியிட்டார்.

டாக்டர்கள் கொடுக்கும் **மருந்து தவிர்த்து** நான்கு காரியங்கள் அத்தியாவசியமென எனது அன்புக்குரிய இம்மருத்துவர்கள் என்னிடம் வலியுறுத்தினர். (1) **உணவு வகையில்** கட்டுப்பாடு (2) கிரமமான **உடற்பயிற்சி** (3) வாழ்க்கை முறையில் மாற்றம் (4) அவ்வப்போது **மருத்துவ பரிசோதனை**. இப்போதும் இவற்றை நான் என்னால் முடிந்த அளவு கவனமாய் கடைப் பிடிக்கிறேன்.



☐ நமது **ஆன்மீக இதய ஆரோக்கியத்திற்கும்** மேலே டாக்டர்கள் அறிவுறுத்திய இவை நான்கும் இன்றியமையாதவை. இக்கட்டுரையின் கருப்பொருள் இதுவே.

☐

## கொழுத்த இருதயம்

☐ எனக்கிருந்தது **இரத்த அழுத்தமோ,** சர்க்கரை வியாதியோ அல்ல, ஆனால் அதிகக் **கொழுப்புச் சத்து** (Cholesterol) **கொழுப்பு** என்ற பதத்திற்குத் திமிர் என்ற இணைச்சொல்லும் உண்டு. எனது இரத்தத்திலேயும் அது உண்டு என்று உங்களில் பலருக்கு தெரியும்! இதன் அர்த்தத்தில்தான் பல இடங்களில் பைபிளில் **இச்சொல்லைப்** பயன்படுத்துகிறது. இறப்பதற்கு சற்று முன்னர் **மோசே** தனது பாடலில் புலம்பியது **யெஷூரன் கொழுத்துப்போய் உதைத்தான். கொழுத்து,** பருத்து முரடனானபோது **தன்னை படைத்த தேவனைவிட்டு** தனது இரட்சிப்பின் கன்மலையானவரை **அசட்டை பண்ணினான்.** (உபா. 32:15) **யெஷூரன்** என்பது செய்யுளில் **இஸ்ரவேல்** என்பதற்கு பயன்படுத்தும் பெயர். **ஆசீர்வாதங்களும்**. சாதனைகளும், வெற்றிகளும் , விரிவாக்கங்களும், **வருமானமும் பெருகிவிடுவதால்** நம்மில் பலரும் இந்நிலையைத்தானே அடைந்து விடுகிறோம். (எரே. 12:2,3)

**செருக்குற்றோரின்** இருதயம் **கொழுப்பேறிப்போயிற்று**. நானோ **உமது வேதத்தில்** மனமகிழ்ச்சியாயிருக்கிறேன். என்று சங்கீதக்காரன் பாடினார். (சங். 119:69,70), ஆம், நம்மில் எத்தனை பேர் வேதத்தின் மீதிருந்த **ஆதிப் பிரியத்தை** வாஞ்ஜையை இழந்துவிட்டோம். (லூக் 8:16) **அளவுக்குமீறிய பிரசங்கங்களை** கேட்டுக்கொண்டேயிருப்பதும் தேவனது குரலுக்கு நம்மைக் **கீழ்ப்படியாது மழுங்கிவிடச் செய்கிறது** (ஏசா. 6:9,10) **இருதயம் கொழுத்துப்போகும்போது** எளியோர் மற்றும் தேவையிலிருப்போர் மீதிருக்கவேண்டிய கரிசனையும் மறைந்துப்போகிறது (1 யோ. 3:17) தீர்க்கன் எரேமியா மூலம் ஆண்டவர் கொடுத்த எச்சரிப்பு இதுவே. (எரே 5:28)

## 2) இருதயமே ஊற்று

☐ **இருதயமானது** உடலுறுப்புகளில் அதிமுக்கியமானது, உடல், மனது, ஆன்மா ஆகியவற்றை உள்ளடக்கிய **நமது மானிடத்தை ஆளும்** Central Government **மத்திய அரசு இருதயமே** என்ற அர்த்ததில்தான் திருமறை இப்பதத்தைப் பயன்படுத்துகிறது. நமது அறிவு, சித்தம், உயர்வுகள் போன்றவற்றை ஒருங்கே கொண்டுள்ள நமது ஆள்தத்துவத்தைக் கட்டுக்குள் வைத்திருப்பதும் நமது இருதயமே. நமது **உள்ளான மனிதனுக்கு** மறுபெயர் **இருதயம்** எனலாம். மையமான அல்லது தவிர்க்க முடியாத எதையும் **இருதயம்** எனும் பதம் குறிப்பிடும். நமது வாழ்க்கையின் போக்கை நிர்ணயிப்பது **இருதயமே** என்பதால்தான் அதனை முழு விழிப்புடன் காவல் காக்க வேண்டுமெனத் திருவிவிலியம் நமக்குப் போதிக்கிறது. (நீதி 4:23) ஆதியாகமம் 6:6ஐ விடச் சோகமான வசனம் பைபிளில் கிடையாது. மண்ணுலகில் மனிதனைப் படைத்ததற்காய்க் கர்த்தர் மனவருத்தம் அடைந்தார். அது அவரது இருதயத்திற்கு விசனமாயிர்ந்தது ! மனிதனது இருதயத்தின் நினைவுகளின் தோற்றம் எல்லாம், எந்நாளும் பொல்லாதவையாகிவிட்டதே, இதற்குக் காரணம் (வச 5) **எல்லாம் … எந்நாளும்** எனும் வார்த்தைகளைக் கவனியுங்கள். **இருதயமே** தீயவை யாவற்றிற்கும் ஊற்று என நீதிமொழிகள் புத்தகம் கூறி பல காரியங்களைச் சுட்டிக்காட்டுகிறது. **சதித் திட்டங்கள்** (6:18), **இச்சை** (6:25), **தந்திரம்** (7:10), **கபடம்** (12:20), **மதியீனம்** (12:23), **மனகசப்பு** (14:10), **பின்மாற்றம்** (14:14), **அகந்தை** (16:5), **இறுமாப்பு** (18:12). **மடமை** (19:3) மற்றும் **பொறாமை** (23:17), இயேசுவானவரின் போதனையைக் கவனிப்போம். **இருதயத்திலிருந்து** பொல்லாத **எண்ணங்களும், கொலைவெறிகளும்,**

**விபச்சாரங்களும் வேசித்தனங்களும், களவுகளும், பொய் சாட்சிகளும், தூஷணங்களும்** புறப்பட்டு வரும், (மத். 15:19) **போப்** மற்றும் அவரது சகாக்களின் **இருதயங்களைவிட** எனது **இருதயத்தைக்** குறித்தே **நான் அதிகம் பயப்படுகிறேன்** என்று வெளிப்படையாய்ச் சொன்னார் **மார்டின் லூத்தர் !**

## மாபெரும் இருதய வைத்தியர் (The Great Cordiologist)

எனது வியாதியை கண்டுபிடிக்கும்முன் இரத்தப் பரிசோதனை ECG. X-ray. Treadmill போன்ற பல்வேறு மருத்துப் பரிசோதனைகள் எனக்குச் செய்யப்பட்டன. **இருதயம்** என்பதற்கான **கிரேக்கச்** சொல் Kardia ஆகும். அதிலிருந்துதான் Cardiology என்ற பதம் வருகிறது. **பரிசோதனையின்** முடிவுகள் அனைத்தையும் சேர்த்துவைத்துப் பார்த்ததே மருத்துவர் முடிவாக வியாதியைக் கண்டறிகிறார். வெறும் அறிகுறிகளோ அல்லது அறிகுறிகளே இல்லாமையோ நம்மை ஏமாற்றிவிடலாம். என்னை பொருத்த அளவில் பெரிதாக அறிகுறி எனக்கு எதுவுமில்லை. நமது **கிறிஸ்தவ வாழ்விலும்** இப்படித்தான். அவ்வப்போது **பரிசோதனை செய்துகொள்ளத் தவறிய** மதியீனத்தைப் புரிந்துக்கொள்ளத் திடீரென்று விழித்துவிடுவோம். நம் **தேவனே** நமது மகாபெரிய **இருதய மருத்துவர்!** அவரால் கண்டுபிடிக்க முடியாத உள்ளான நிலை எதுவுமில்லை, வியாதி என்னவென்று கண்டுபிடிப்பதில் அவர் தவறு செய்வதேயில்லை. அவர் கண்டுபிடித்த பின்னர் இன்னொரு மருத்துவரிடம் கலந்தாலோசிக்க தேவையேயில்லை. **பாதாளமும், படுகுழியுமே** அவரது பார்வைக்கு வெட்ட வெளிச்சமாயிருக்க. நமது **இருதயம்** அவரது பார்வைக்கு மறைவாயிருக்குமோ ? (நீதி 15:11) **வெள்ளியை** உலைக்களமும் **பொன்னைப்** புடக்குகையும் சோதித்துப்பார்ப்பது போலவே அவர் நமது **இருதயத்தைத்** சோதித்தறிகிறார். (17:3) இது **சூளை வழியாய்** செல்லும் அனுபவம்தான் ! அவ்வளவு **வேதனையாய் இருந்தாலும்** அவரது அறுவை சிகிச்சை மேசையின்மீது **நிபந்தனையின்றி** நாம் நம்மைக் கிடத்திவிடுவதுான் பாதுகாப்பு, இதோ **அவர் தரும் வாக்கு,** பணித்தவர்களின் **ஆவியை** உயிர்ப்பிக்கவும் **நொறுங்கினவர்களின் இருதயத்தைத்** திடப்படுத்தவும் நான் அவர்களுடன் குடியிருக்கிறேன். (ஏசா, 57:15) அவரது **வார்தையே அறுவை சிகிச்சை** மேசைக்கு மேலே தொங்கும் ஊடுருவும் கதிர் விளக்குகள் (எபி 4:13) **அவரது வார்த்தையே** ஸ்கேனர் (யாக் 1:23) **அவரது**

**வார்த்தையே** அறுவை சிகிச்சை கத்தி (எபி. 4:12) நமது வெளித்தோற்றத்தில் அல்ல. இருதயத்தின் நிலையிலேயே அவருக்குக் கவனம் (1 சாமு 16:7) **ஒல்லியாய்** விறுவிறுப்பாய் ஓடியாடிப் பணியாற்றிக்கொண்டிருந்த **ஆறடி ஸ்டான்லிக்கா** இருதய நோய் என்பது மக்களுக்கு வியப்புதான் !

## இருதய ஆராய்ச்சிக் கேள்விப் பட்டியல்கள்

1962ம் ஆண்டு கல்லூரியில் அப்பொழுதுதான் நுழைந்திருந்த நான் **நாசரேத்தில்** நடந்த **ஜெபக்குழுவில்** மறுபடி பிறந்தேன். (இரட்சிக்கப்பட்டேன்) அடிக்கடி தனித்து **இருதய ஆராய்ச்சி** செய்யும் பழக்கம் இக்குழுவில் அதிகமாயிருந்தது. 1963ம் ஆண்டு **காரைக்குடி** பொறியியல் கல்லூரி வளாகத்தில் நான் நிறுவிய **ஜெப ஐக்கியத்தில்** இப்பழகத்தை அறிமுகம் செய்தேன். அக்காலத்தில் அமெரிக்காவிலிருந்து மாதந்தோறும் வெளியாகிவந்த Herald of His Comming (வருகையின் தூதன்) என்ற எழுப்புதல் பத்திரிகை எங்களுக்குத் தவறாமல் கிடைத்தது, வெறும் இறையியலறிவு என்றில்லாது அனலான அருட்செய்திகளைச் சுமந்து வந்த இப்பத்திரிகையில் பல்வேறு விதமான **தற்பரிசோதனைக் கேள்விபட்டியல்கள்** காணப்படும். அவற்றை நாங்கள் எங்கள் வேதாமக் குறிப்பேடுகளில் எழுதிவைத்துக்கொண்டு **தனித்தும், கூடியும்** இருதயத்தை ஆராய்ந்து பார்க்கப் பயன்படுத்தவோம், அப்பொழுதெல்லாம் Xerox கிடையாது, 1971ல் நடந்த **ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின்** BYM முதலாம் ஆண்டு முகாமிலிருந்து ஒவ்வொரு ஆண்டும், முதல் செய்தியை அடுத்து முகாமியர் ஒவ்வொருக்கும் **முகாமின் கருப்பொருளைத்** தழுவிய தற்பரிசோதனை கேள்வித்தாள் ஒன்று வினியோகிக்கப்டும், முதல் செய்தியானது **பரிசுத்ததைப்** பற்றியே இருக்கும், முகாமியர் இக்கேள்வித்தாள்களுடன் முகாம் நடந்த தோட்டமெங்கும் வாலிபர்கள் சிதறி சென்று ஆங்காங்கே மரத்தடியில் **முழங்காலில் விழுந்து** ஒவ்வொரு கேள்வியாய் வாசித்துத் தங்களை ஆராய்ந்து பார்ப்பார்கள் **மனந்திரும்புதலின் கண்ணீர் நதியாய் ஓடும்,**

## தேவனே என்னை ஆராய்ந்து பாரும்

இருதய ஆராய்ச்சி என்று பேசும்போது முதலாவது நாமே நம்மை ஆராய்ந்து பார்க்கவேண்டும், நமது **இருதயமே** நம்மைக் குற்றவாளிகளெனத் தீர்ப்பளிக்குமானால்

தேவன் நமது **இருதயத்திலும் பெரியவராயிருந்து,** அனைத்தையும் அறிந்திருக்கிறார், பிரியமானவர்களே, நமது இருதயம் நம்மை குற்றவளிகளென தீர்ப்பளிக்காதிருந்தால் நாம் தேவனிடம் தைரியம் கொள்ளலாம் (1 யோ, 3:20,21) இது அவ்வளவு சுலபமான பயிற்சியல்ல, எனவேதான் **தனது பிழைகளை உணருகிறவன் யார் ?** என்று தாவீது சவாலிட்டார் (சங்,19:12) துணிகரமான பாவங்கள் மற்றும் பெரும் பாதகங்கள் என்பவற்றைவிட **நமது மறைவான குற்றங்களே அதிகமாயிருக்கும்** (வச. 12,13) நமது உடைகளையல்ல, **உள்ளத்தையே கிழித்து** அவரிடம் திரும்ப தேவன் நம்மை அழைக்கிறார் (யோவேல் 2:12,13) மேழெுந்தவாறு பார்ப்பதே பரிசுத்தத்தில் வளருவதற்கு பெரும் முட்டுக்கட்டை, நமக்கே தெரிந்த பாவங்களையும் மீறுதல்களையும் தேவனிடம் அறிக்கை செய்த பின்னரே தாவீதைப்போல் நாம் ஜெபிக்கவேண்டியது, தேவனே என்னை ஆராய்ந்து என் இருதயத்தை அறிந்துக்கொள்ளும், என்னை பரிசோதித்து என் சிந்தனைகளை அறிந்துக்கொள்ளும். (சங், 139:23, 26:2) யோபுவும் இதே வகையில்தான் தேவனை நாடினார், என் அக்கிரமங்களும் என் பாவங்களும் எத்தனை ? என் மீறிதலையும் என் பாவத்தையும் எனக்கு உணர்த்தும். (யோபு 13:23) Search me. O God. and no my Heart today என்ற பயபக்தியான பாடலை இயற்றிய Dr. J. எட்வின் ஆர் (1912 – 1987) அவர்களை 1968ம் ஆண்டு சென்னை இம்மானுவேல் மெதடிஸ்டு ஆலய மாலை ஆராதனை ஒன்றில் அவர் பிரசங்கத்தை நேரில் கேட்கும்வாய்ப்பு எனக்கு கிட்டியது Dr. சாம் கமலேசன் (1930– 2021) அவர்கள் அப்பொழுது அச்சபையின் போதகராயிருந்தார், Dr. ஆர் அவர்களிடம் எனது பைபிளைக் கொடுத்து கையெழுதிடச் சொன்னேன், தன் கையெழுத்தோடு சேர்த்து அவர் எழுதிய **வசனக்குறிப்பு** என்ன தெரியுமா? 1 யோவான் 1:8 **நமக்குப் பாவமில்லை என்று சொன்னால் நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வோம். நம்மில் உண்மை இல்லை,** ஆம் அவர் ஓர் எழுப்புதல் வீரர்தான் Revivalist அவர் ஒரு சுவிசேஷகராய் Evangelist இருந்திருந்தால் தனது கையெழுத்துகடியில் யோவான் 10:10 என்று குறிப்படிருப்பார், இப்பாடலை நாங்கள் பாடிய கூடுகைகளிலெல்லாம் ஆவியானவரின் அசைவாட்டம் பலமாயிருந்தது.

அனுதினமும் கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்படுவது தவிர்த்து அவ்வப்போது **ஒரு சில நாட்களை இருதய ஆராய்சிக்கென்றே** கடந்த ஆண்டுகளிலெல்லாம் நான் ஒதுக்கி வைத்திருக்கிறேன், நாம் காலணிகளோடு நடந்தாலும் கால் கழுவ

வேண்டுமல்லவா? இயேசுவைக் பொருத்தவரை **குளித்தல் என்பது** நிலையின்படிப் **பரிசுத்தமாக்கப் படுதலையும்** Possitional Santification **கால்கழுவுதல்** என்பது நடைமுறையில் **சுத்திகரிப்படுவதையும்** Practical Santification குறிக்கும் (யோ. 13:5-10) கிறிஸ்துவே நமக்கு நீதியும் பரிசுத்தமும் ஆகிவிட்டதால் நமக்குத் தேவனுக்குமுன் கிடைத்துள்ள நிலைமை Standing ஒன்று எடுத்துக்காட்டுகிறது, (கொரி 1:31) அடுத்தது பரிசுத்த ஆவியனவருடன் நாம் ஒத்துழைக்கையில் நெடுகவே நம்மில் நடக்கும் பரிசுத்தமாக்கப் படுதலாகிய நமது நடை State என்பதைக் குறிக்கிறது, பல்வேறு கோணங்களிலிருந்து நான் என்னை ஆராய்ந்து பார்த்து வந்திருக்கிறேன்.

தேவன் அன்பாக இருக்கிறார். அன்பில் நிலைக்கொண்டிருப்பவன் தேவனில் நிலைக்கொண்டிருக்கிறான். தேவனும் அவனில் நிலைக்கொண்டிருக்கிறார். (யோ. 4:16ஆ)

## நான் பைபிளை நேசிக்கிறேனா ?

**1. யோபுவின் சாட்சி**

**தேவனது வாயின் வார்த்தைகளை** எனது அடிப்படையான உணவைவிட முக்கியமாய் கருதுகிறேன். (யோபு 23:12)

தேவனது வார்த்தைக்கு நடுங்குவோர் யாவரும் என்னுடன் கூடிக்கொண்டார்கள். (எஸ்றா9:4)

**2. சங்கீத காரனின் சாட்சி**

உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன், நாள் முழுவதும் அதுவே என் தியானம் (சங். 119:97)

**3. எரேமியாவின் சாட்சி**

உமது வார்த்தைகள் கிடைத்தவுடன் அவற்றை உண்டுவிட்டேன். உமது வார்த்தை எனக்கு மகிழ்ச்சியும் என் இருதயத்திற்கு இன்பமுமாயிருந்தது. (எரே. 15:126)

**4. மரியாளின் சாட்சி**

இதோ நான் ஆண்டவருக்கு அடிமை !

உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும். (லூக் 1:38)

**5. இயேசுவின் சாட்சி**

புத்தகச் சுருளில் என்னை குறித்து எழுதப்பட்டிருக்கிறது. தேவனே உமது சித்தம் செய்ய இதோ வருகிறேன். (எபி. 10:7)

**6. பேதுருவின் சாட்சி**

மனிதனின் மேன்மையானது புல்லின் பூவைப்போன்றது. புல் உலரும், பூ உதிரும் கர்த்தருடைய வார்த்தையோ என்றும் நிலைத்திருக்கும் ! (1 பேது 1:24,25)

**ஆதி அன்புக்கு மாற்றுக்கள்** வெளிப்படுத்தல் 2:1-7

1, சோம்பலுக்கே இடம் கொடாமல் பல்வேறு வேலைகளில் நான் விறுவிறுப்பாயிருக்கலாம், ஆனாலும் தேவன் மீதிருந்த எனது ஆதி அன்பைத் தக்க வைத்கொள்ளுகிறேனா? (வச. 2)

2. கடின உழைப்பிற்கும் விடா முயற்சிக்கும் நான் என்னை அர்ப்பணித்திருக்கலாம். அது இறையரசிற்காகக்கூட இருக்கலாம். ஆனாலும் தேவன் மீதிருந்த எனது ஆதி அன்பைத் தக்க வைத்துக்கொள்கிறேனா ? (வச. 2,3)

3. நான் எவ்வித முறுமுறுப்புமின்றி எல்லா சிரமங்களையும் சகித்துக்கொள்ளலாம். ஆனாலும் தேவன் மீதிருந்த எனது **ஆதி அன்பைத்** தக்கவைத்துக்கொள்கிறேனா ? (வச. 2)

4. நான் தீயதை சகிக்காதிருக்கலாம், ஆனாலும் தேவன் மீதிருந்த எனது **ஆதி அன்பைத்** தக்கவைத்துக்கொள்கிறேனா ? (வச 2)

5. நான் துர் உபதேசங்களையும் கள்ள ஊழியரையும் சரியாய் அடையாளங்கண்டு அவர்களை ஒதுக்கலாம். ஆனாலும் தேவன் மீதிருந்த **எனது ஆதி அன்பைத்** தக்கவைத்துக்கிறேனா? (வச 2)

6. நான் இயேசுக்காய் பாடனுபவிப்பதில் பொறுமையாய் விட்டுவிடாமல் தொடரலாம், ஆனாலும் தேவன் மீதிருந்த **எனது ஆதி அன்பைத்** தக்கவைத்துக் கொள்ளுகிறேனா? (வச 3)

7. நெறிகெட்ட செயல்களை முழுப்பகையாய் நான் வெறுக்கலாம். ஆனாலும் தேவன் மீதிருந்த **எனது ஆதி அன்பைத்** தக்கவைத்துக்கொள்ளுகிறேனா? (வச 6)

**ஆதி அன்பு திரும்ப வருமானால்** அதற்கு வாக்களிக்கப்படும் ஆதி ஆசீர்வாதம் பரதீசிலுள்ள (ஜீவ விருட்சம்) வாழ்வு மரம் (வச. 7)

## நான் விண்ணகச் சிந்தையுள்ளவளா?

1. எதைக் குறித்து நான் தொடர்ந்து கவலைப்படுகிறேன் ? உடலுக்கடுத்த தேவைகளா, இறையரசுக்கடுத்தவையா? (மத். 6:31-33)

2.எதைக்குறித்து நான் பிரதானமாக்க சிந்தித்துக்கொண்டிருக்றேன்? தேவனுக்கடுத்தவையா மனிதருக்கடுத்தவையா (மத். 16:23)

3. நான் **எனக்காகத்தான் பெரிய அளவில்** பணம் சேர்த்து வைக்கிறேனா அல்லது தேவனுக்கு நேராய்ச் செல்வந்தனாயிருக்கிறேனா ? (லூக் 12:21)

4, எனது நம்பிக்கை அதிகமாகப் பூவுலகிற்கடுத்தவற்றின் மீதிருக்கிறதா அல்லது பரலோகக் காரியங்கள் மீதிருக்கிறதா? (யோ. 3:12)

5. மனித இயல்பின்படியான சிந்தனைக்கு மாறாக ஆன்மீகச் சிந்தையில் வளருகின்றேனா? (1கொரி 2:14,15)

6 எனது வாழ்வை ஆட்கொள்ளும் தத்துவம் யாது ? சாப்பிடு - சாவு என்பதா அல்லது **உயிர்த்தெழுதலின் நம்பிக்கையா** ? (1 கொரி 15:32, 33)

7. மண்ணுலகப் பாடுகளில் மூழ்கிவிடுகிறேனா அல்லது நித்திய மகிமையைப் பாடி மகிழுகிறேனா? (2 கொரி 4:17- 5:5)

8. சுகமும் செல்வமும் கிடைக்கப்படுவதற்காகவே நான் இயேசுவைப் பின்பற்றுகிறேனா அல்லது பரலோகப் பொக்கிஷங்களையும் மகிமையையும் மனதில் கொண்டுள்ளேனா ? (பிலி 3:17-21)

9. எனது மனது பூவுலகுக்கடுத்த காரியங்களிலேயே கவனம் செலுத்துகிறதா அல்லது உன்னதத்திற்கடுத்தவற்றில் பதிக்கப்பட்டுள்ளதா? (கொலோ 3:1-3)

10. பிதாவாகிய தேவனது அன்பினால் நான் ஆட்கொள்ளப்பட்டுள்ளேனா அல்லது ஊனியல்பின் இச்சை, கண்களின் இச்சை மற்றும் வாழ்வின் பெருமை ஆகியவற்றால் பிடிபட்டிருக்கிறேனா? (1 யோ 2:15-17)

இப்பட்டியலில் சொல்லப்பட்டவற்றில் சில திரும்ப திரும்ப வருவதுபோல தோன்றலாம், ஆனால் மருத்துவதுறையைப்போலவே ஒரு சில பரிசோதனைகளைத் திரும்ப திரும்ப செய்வது நலமே.

மேலே தரப்பட்டுள்ள கூடுதலான இருதய ஆராய்ச்சிக் கேள்விப்பட்டியல்கள்

தயாரித்திருக்கிறேன். அவை 33 ஆண்டுகள் (1971 - 2003) நான் தலைமைப் பொறுப்பாசிரியராய் நடத்திவந்த ஆசீர்வாதம் Blessing எனும் பத்திரிகையின் முதல் 333 இதழ்களில் வெளிவந்துள்ளன. ஆசீர்வாத இளைஞர் இயக்கத்துடன் BYM தொடர்பு கொண்டு இப்பழைய இதழ்களிலுள்ள பட்டியல்களைப் பெற்றுக்கொள்ளுங்கள் 2020ல் வெளிவந்த கரோனா கதறல் Corona Calls என்ற எனது நூலிலும் தற்பரிசோதனை உபகரணம் (Self Testing Kit) என்றொரு பட்டியல் உண்டு.

**கெட்ட குணங்களும் நல்ல குணங்களும்** Vices and Virtues

ஏழு கொடிய பாவங்கள் Seven Deadly Sins மற்றும் ஏழு புனித குணங்கள் Seven Holy Virtues என்று உலகெங்கும் தெரிந்துள்ள பட்டியலை நாமறிவோம். கொடிய பாவங்களாவன 1) பெருமை (2) பேராசை (3) துராசை 4) பொறாமை 5) பெருந்தீனி 6) மூர்க்கம் 7) சோம்பேறித்தானம்

முற்காலத்து திருச்சபை வகையறுத்த புனித குணங்களாவன, 1) விசுவாசம் 2) நம்பிக்கை 3) அன்பு 4) நியாயம் 5) புத்தி 6) தன்னடக்கம் 7) திடகாத்தம். இதிலுள்ள முதல் மூன்றும் இறையியல் சம்பந்தப்பட்டவை, அவை ஒரு கூட்டாக வருகின்றன. (1 கொரி 13:13, கலா 5:5,6 கொலோ 1:4,5:1 தெச 1:2) அடுத்துள்ள நான்கும் நன்னெறியையும், அடுத்தவை, தேவப் பிள்ளைகளிடம் காணப்பட வேண்டிய குறைந்தது 25 நற்குணங்களைப் **புதிய ஏற்பாடு** சுட்டிக்காட்டியுள்ளது. மகிழ்ச்சி (ரோ. 5:2,3,11) கீழ்ப்படிதல் (1 பேது 1:2) பரிசுத்தம் (1 பேது 1:15,16) கற்பு (2 கொரி 6:6) கனிவுள்ளம் (எபே 4:32) திருப்தி (பிலி 4:11,12) சமாதானம் (பிலி 4:7) பரிவுணர்வு (கொலோ 3:12) நன்றியுணர்வு (1 தெச5:18) இரக்கம் (2 கொரி 6:6), உபசரிப்பு (ரோ 12:13) சாந்தகுணம் (1 தீமோ 6:11) தயாளம் (2கொரி 9:11,13) சுமூகவுறவு (ரோ 12:18) உண்மை (எபே 4:15,25) தாழ்மை (பிலி 2:3) தேவ பயம் (2 கொரி 5:11) தைரியம் (2கொரி 5:7,8) மென்மைக்குணம் (யாக் 1:21) மன்னிப்பு (கொலோ 3:13) பொறுமை (1 கொரி 13:4) சகிப்பு (பிலி 4:5) தன்னடக்கம் (கலா 5:23) தரித்திருப்பு (ரோ 5:3,4) மற்றும் துணிவு (பிலி 1:20) இந்தத் தீய குணங்கள் மற்றும் நல்ல குணங்கள் ஒவ்வொன்றையும் சிந்தித்துப் பார்த்து உங்கள் இருதயத்தை ஆராய்ந்திருங்கள். நமது **இருதயப் பிரச்சனையை** எவ்வளவு சீக்கிரம் சரி செய்கிறோமா அவ்வளவுக்கும் நல்லது. **பிந்தினால்** மாரடைப்பு Heart Failure ஏற்படும் (பிர 12:6) நெஞ்சு வலி Anginal Pain வரும்வரை காத்திராதீர் (எரே 4:19)

## குற்ற உணர்வு Condemnation வேண்டாம் !

இவ்வித இருதய ஆராய்ச்சிப் பயிற்சிகளை மேற்கொள்ளும்போது குற்ற உணர்வு வருவது இயல்புதான். ஆனாலும் கிறிஸ்து இயேசுவுக்குள் வாழ்வோருக்கு தண்டனைத் தீர்ப்பு இல்லை என்பதை எப்பொழுதும் நினைவில் கொள்ளவேண்டும். (ரோ 8:1) பிசாசு குற்றவுணர்வடையச் செய்கிறான். பரிசுத்த ஆவியானவரோ நம்மைப் பாவ உணர்வடையச் செய்கிறார். **சாத்தான் தரும் குற்ற உணர்வையும்** Comdemnation **பரிசுத்த ஆவியானவர்** அருளும் **பாவ உணர்வையும்** Conviction வேறுபடுத்திப் **பார்க்க நமக்குத் தெரியவேண்டும்.** பாவ உணர்வு தரும் தூய ஆவியானவர் நம்மைப் பாவ அறிக்கைக்கும் கழுவப்படுதலுக்கும் நடத்துகிறார். அறிக்கையிடப்படும் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. மன்னிக்கப்படும் பாவங்கள் மறக்கப்படுகின்றன. (எபி. 8:12, எரே 31:34ஆ) சரியாய் சொன்னால், மறுபிறப்பின் போது தேவன் நமது இருதயத்தை **வெறுமனே பழுதுபார்க்காது** அதனை எடுத்துவிட்டுப் **புதிய இருதயம்** ஒன்றைப் பொருத்திவிடுகிறார். (எசேக் 11:19, 18:31, 36:26) **மாற்று இருதய அறுவை சிகிச்சை** ! Heart Transplantation இந்தப் புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதத்தைக் குறிக்கும் வகையில்தான் தேவனை நோக்கிய தாவீதின் வேண்டுதல் தீர்க்கதரிசனமாய் அமைந்துள்ளது. தேவனே **சுத்த இருதயத்தை** என்னில் சிருஷ்டியும் (சங். 51:10) பரிசுத்தம் என்றால் பாவம், பாவம் என்றே என்றே எப்போதும் நினைத்துக்கொண்டிருப்பதல்ல. மாறாக அது கிறிஸ்து என்றே இருப்பதாகும் ! Not Sine conseiousness. but son conseiousness

அதுதான் **சுத்த மனசாட்சி** (எபி. 9:13,14, 10:19-22) கிறிஸ்துவு**க்குள் !** கிறிஸ்து**வுடன்**! கிறிஸ்து **மூலம் !** எல்லாம் இயேசுவே எனக்கெல்லாம் இயேசுவே ! என்று பாடுவோம்

## ஏப்ரல் 23

1996 ஏப்ரல் 23 செவ்வாய் அன்று காலையில் அறுவை சிகிச்சை அறைக்கு நான் எடுத்துக்செல்லப்பட்ட வேளையில், நான் அசாதாரணமாக அமரிக்கையாய் இருந்தேன். பொதுவாக நான் அதிகம் பதறுபவன், அந்நாட்களில் இருதய அறுவை சிகிச்சைகள் பல **வெற்றிகரமாய் நடந்து முடிவதில்லை,** நான் அன்று பதட்டமில்லாமல் இருந்தற்குக்

காரணங்கள் (1) **எந்த விபரீத சூழலையும்** சமாளித்துகொள்ளுமளவு **எனது மனைவியும் என் மகளும்** தனித்தியங்குத் திறனும், புத்திக்கூர்மையும் மனத்திடமும் கொண்டவர்கள். (2) ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் BYM **பிரதமத் தலைவனாய்** நான் இருந்தாலும். மாவட்ட மாநில ஒருங்கிணைப்பாளர் மற்றும் **ஊழியர்** ஒருங்கிணப்பாளர்கள் ஒருங்கிணைப்பாளர், **இலக்கியத்துறை** ஒருங்கிணைப்பாளர் மற்றும் **நிதி ஒருங்கிணைப் பாளர்** ஆகிய **மத்திய** ஒருங்கிணைப்பாளர்களுடன் Co-ordinators **பகிர்ந்த கூட்டுத் தலைமையே** Shared Leadership என்பதே எனது பணி அவர்களிடம் புதிதாய் ஒப்படைத்துச் செல்ல எதுவுமில்லை, கர்த்தத்துவம் அவர் தோள்மீது அல்லவா இருந்தது ? (ஏசா.9:6,7) ஏற்கனவே 20 புத்தகங்கள் எழுதியிருந்தும் எனது **திருமறைத் தியானங்கள்** மற்றும் **ஆராய்ச்சிக் குறிப்புகள்** பல இன்னும் எழுத்து வடிவம் பெறவில்லையே என்ற ஒன்றுதான் எனக்கிருந்த கவலை, உயிருடன் பத்திரமாய் என்னை ஆஸ்பத்திரியைவிட்டு வெளியே கொண்டுவந்த **தேவனைத் துதிக்கிறேன்,** தீவிர சிகிச்சை பிரிவிலிருந்து ICU **பொது அறைக்குப்கொண்டுவரப்பட்ட** நான்காம் நாளிலேயே **ஆசீர்வாதம் பத்திரிகையின்** அடுத்த இதழுக்கு **அச்சுப்பிழை திருத்தம்** செய்யத் தொடங்கினேன் ! அன்று முதல் இன்று வரை எவ்வகை ஊழியத்தையும் விட **எழுத்துப்பணியிலேயே** அதிக நேரம் செலவழித்து வருகிறேன், கடந்த மூன்றாண்டுகளாகப் **பிரசங்கப் பணியை ஏறத்தாழ நிறுத்திவிட்டேன்,** நல்ல பலன் . ஏதோ ஓர் இடத்தில் கூட்டங்களில் பிரசங்கிப்பதைவிட **நான் எழுதி** எனது **இணையதளத்தில்** வெளியிடும் **கட்டுரைகள்** மற்றும் **புத்தகங்கள்** மூலம் **அகில உலக அளவில்** கூடுதல் மக்களுக்கு **ஆசீர்வாதமாயிருக்கிறேன்.**

சுவாரஸ்யமானதொரு காரியம் என்னவெனில் ஐக்கிய நாடுகள் சங்கம் UNESCO ஏப்ரல் 23ஐ அகிலவுலகப் புத்தக நாள் World Book Day என்றறிவித்துள்ளது, **புத்தகங்கள்,** நூலாசிரியர்கள் மற்றும் வாசகர்களுக்கான கொண்டாட்ட நாளாக இது அனுசரிக்கப் படுகிறது, மட்டுமல்ல 1564ல் **ஏப்ரல் 23** அன்றுதான் **ஷேக்ஸ்பியர்** பிறந்தார். 1616ல் **ஏப்ரல்23** அன்று அவர் இறந்தார், இப்படி பிறப்பது ஒரே மாதம் இறப்பதும் ஒரே தேதி என்பது சாத்தியமா?.

**STATEMENT OF OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT NEWSPAPER JAMAKKARAN**
**(FORM IV)**

| | | |
|---|---|---|
| 1. Title of the news paper | : | **JAMAKKARAN** |
| 2. Language(s) in which it is published | : | **TAMIL / MALAYALAM** |
| 3. Place of publication | : | 89,Majeeth Street, Old Suramangalam, Salem - 636 005. |
| 4. Periodicity of its publication | : | Monthly |
| 5. Printer's name | : | M.Velu |
| (whether citizen of India) | : | Indian |
| Address | : | P.M.Press<br>168,Arumuga Nagar, Salem-636 005 |
| 6. Publisher & Editor's name | : | **Dr.M.G.E.PUSHPARAJ** |
| (whether citizen of India) | : | Indian |
| address | | 89,Majeeth Street, Old Suramangalam. Salem-636005 |

I, **Dr. M.G.E.PUSHPARAJ** *hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.*

Dated : 1- 3-2023
Salem - 636 005

**(Sd.) Dr. M.G.E.PUSHPARAJ**
*Signature of Publisher & Editor*

**MARCH - 2023**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.